DEPOSITION OF WITNESS
(Chapter XXV of BNSS)
IN THE COURT OF Prl. DISTRICT AND SESSIONS JUDGE KANYAKUMARI
AT NAGERCOIL

Calendar
Miscellaneous
Preliminary Register
Session Case S.C.No. 312/2023
Prosecution Witness -P.W. 21

Deposition of witness for Prosecution

| | | |
|---|---|---|
| Name | : | திரு. எட்வர்ட் |
| Father's Name | : | உடையார் நாடார் |
| Village | : | சண்முகபுரம் |
| Taluk | : | தோவாளை |
| Calling | : | - |
| Religion | : | இந்து |
| Age | : | 50 |
| Date | : | 24.01.2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.01.2025.

(1, 2, மற்றும் 4 ஆம் எதிரிகள் இன்று நீதிமன்றத்தில் ஆஜர். 3 ஆம் எதிரி ஆஜர் செய்யப்படவில்லை. அவருக்காக பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

<u>24.01.2025</u>

**<u>முதல் விசாரணை:-</u>**

நான் அனந்தபத்மநாபபுரம் ஆசிரியர் காலனியில் வசித்து வருகிறேன். அனந்தபத்மநாபபுரத்தில் ஆக்கர் கடை வைத்திருந்தேன். ஆஜர் எதிரி விஜயனை எனக்கு தெரியும் என சொல்லி 2 ஆம் எதிரியை அடையாளம் காட்டுகிறார். 3 வதாக

நிற்கும் 4 ஆம் எதிரியை ஜோஸ் என அடையாளம் காட்டுகிறார். ஆஜர் எதிரிகள் மூன்று பேரையும் எனக்கு 5 வருடங்களாக தெரியும். என்னிடம் வேலைக்கும் வந்துள்ளார்கள். செலவுக்கு பணம் வேண்டும் என்றால் என்னிடம் கேட்டு வாங்குவார்கள். அந்த வகையில் 06.09.2024 அன்று என்னிடம் செல்போனை வைத்து 2,000 ரூபாய் பணம் வாங்கினார்கள். அதற்கு பிறகு 10 நாட்கள் கழித்து போலீசார் வந்து என்னிடம் செல்போனை வாங்கிச் சென்றார்கள். என்னிடம் போலீசார் எதிரிகள் செல் என்னிடம் உள்ளதா என கேட்டு வாங்கிச் சென்றார்கள். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருத கோரி, அனுமதிக்கப்பட்டது.**

09.06.2023 ஆம் தேதி அன்றுதான் இரவு 9.00 மணிக்கு விஜயன் மற்றும் ஜோஸ் என்னிடம் செல்போனை கொடுத்து விட்டு ரூபாய் 2,000/- த்தை வாங்கிச் சென்றார்களா என்று அரசு வழக்கிறஞர் கேட்ட கேள்வி சாட்சியை Lead செய்வது போல் உள்ளதால் அனுமதிக்கப்படவில்லை.

என்னை போலீசார் விசாரிக்கும்போது 09.06.2023 ஆம் தேதி அன்றுதான் இரவு 9.00 மணிக்கு விஜயன் மற்றும் ஜோஸ் என்னிடம் செல்போனை கொடுத்து விட்டு ரூபாய் 2,000/- த்தை வாங்கிச் சென்றதாக கூறியுள்ளேன் என்றால் அவ்வாறு சொன்னதாக எனக்கு ஞாபகம் இல்லை. மறுநாள் பேப்பரில் பார்த்து ஆஜர் எதிரிகளும், மற்றொரு எதிரி மணிகண்டனும், ஏசுதாஸ் என்பவரை கொலை

செய்தததை தெரிந்து கொண்டதாக போலீசார் விசாரிக்கும்போது சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளை காப்பாற்றுவதற்காக எதிரிகளுடன் கூட்டு சேர்ந்து கொண்டு பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்)</u>** :-

இல்லை.